மக்களின் நாளேடு　　விலை ரூபா 4-50

# முரசொலி

முரசு 05 ஒலி 106 பிரமோதூத மாசி 29 (13-03-1991) புதன்

## மடுமாதாதேவாலய அகதிகளுக்கு 6 லொறிகளில் உணவுப்பொருள்

மடுமாதாதேவாலயத்திலுள்ள அகதிகளுக்கு கொழும்பிலிருந்து ஆறு லொறிகளில் அத்தியாவசிய உணவுப் பொருள்கள் அனுப்பப்பட்டுள்ளதாக அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகராலய வட்டாரங்கள் தெரிவித்தன. மடு தேவாலய அகதி முகாமை அகற்றுவது தொடர்பாக அரசு ஆலோசித்துவரும் இவ்வேளையில் இவ் அகதிமுகாம் நிவாரணப் பணிகளில் எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. சர்வதேச செஞ்சிலுவைச் சங்க உயர் அதிகாரிகளும் அகதிகளுக்கான ஐ. நா உயர்ஸ்தானிகராலய அதிகாரிகளும் இங்கு விஜயம் செய்து நிலைமைகளை நேரில் அவதானித்தனர். இதேவேளை வவுனியாவில்

...04 ஆம் பக்கம் பார்க்க

# இந்தியாவுடன் நட்புறவு ஒப்பந்தம் பிரேமதாஸ ஆர்வம்!

### வெளியுறவுச் செயலர் டூபே தகவல்

இந்திய - சோவியத் ஒப்பந்தம் போன்ற சமாதான நட்புறவு ஒப்பந்தம் ஒன்றை இந்தியாவுடன் செய்துகொள்ள ஜனாதிபதி பிரேமதாஸ ஆர்வம் கொண்டுள்ளார் என இந்திய வெளியுறவுச் செயலர் முசுகுந் டூபே தெரிவித்துள்ளார்.

இரு நாடுகளுக்கும் இடையில் ஏற்பட்டுவரும் இந் நெருக்கடிகளுக்கு காரணம் முன்னாள் வெளியுறவு அமைச்சரின் இலங்கை விஜயமாகும்.

1987 ஜூலையில் செய்து கொள்ளப்பட்ட ராஜீவ்-ஜே. ஆர் உடன்படிக்கையை அடுத்து இரு தலைவர்களும் பரிமாறிக் கொண்ட கடிதங்களின் சில ஷரத்துக்களைச் சிக்கட்டுவதில் ஜனாதிபதி பிரேமதாஸ் அக்கறை காட்டி வருகிறார்.

1987 உடன்படிக்கையின் படி திருகோணமலைத்துறை

— 04 ஆம் பக்கம் பார்க்க

## பருத்தித்துறையில் பீரங்கித் தாக்கு

பருத்தித்துறை முனைப் பகுதி குடியிருப்புக்களை நோக்கி கடற்படையினர் பல மணி நேரம் பீரங்கித் தாக்குதலை நேற்றுப் பகல் 2 மணி முதல் மாலை வரை மேற்கொண்டனர். (88)

அதிகாலை மூன்று மணி முதல்

## வவுனியாவில் விமானத்தாக்கு மூவர் பலி; நால்வர் காயம்

வவுனியாவில் நேற்றுக் கடும் விமானத் தாக்குதல் நடைபெற்றுள்ளது. நேற்று அதிகாலை மூன்று மணியளவில் இரு விமானங்கள் குண்டு வீச்சை ஆரம்பித்தன.

முதலாவது தாக்குதல் தேவகுளம் பகுதியில் இடம் பெற்றது. இதனால் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஸ்ரீபத்மநாதன் (35), ஸ்ரீமாலினி (30) மற்றும் இவர்களின் வயோதிபத் தாயார் ஆகியோர் கொல்லப்பட்டனர்.

மீண்டும் காலை 9.30 மணிக்கு வந்த பொம்மர்கள்

— 04 ஆம் பக்கம் பார்க்க

## எதிர் வரும் பொதுத் தேர்தலில் வி. பி. சிங் கட்சி தனித்துப்போட்டி

எதிர்வரும் பொதுத் தேர்தல்களின் போது முன்னாள் பிரதமர் வி. பி. சிங்கின் ஜனதா தள கட்சி தனித்தே போட்டியிடவுள்ளது.

எனினும் சில மாநிலங்களில் அம் மாநில கட்சியுடன் தொகுதி உடன்பாடு காண நேரிடலாம் என ஜனதா தள கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதே வேளை தமிழ் நாட்டில் இலங்கைப் போராளிகள் ஊடுருவ வி. பி. சிங்கும் மு. கருணாநிதியும் தான் காரணம் என செல்வி. ஜெயலலிதா குற்றஞ்சாட்டியுள்ளார்.

## படகு மீது கடற்படைத் தாக்கு

வடமராட்சி கிழக்கு, மணல்காட்டுக் கடலில் தொழிலுக்குச் சென்று கொண்டிருந்த படகு மீது கடற்படை தாக்குதல் நடாத்தியதில் அப் படகு தீப்பற்றி எரிந்தது.

இதேவேளை நேற்று இரவு பலாலி முகாமிலிருந்து தொண்டமானாறு குடிமனைகள் நோக்கி ஆட்லறி ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. சேத விவரம் தெரியவில்லை. (71)

## கூட்டுறவுச் சங்கங்களுக்கு பொருள்கள் வந்தால் உலர் உணவு விநியோகம் பாதிக்கப்படும்

பல நோ. கூ. சங்கங்கள் கப்பல் மூலம் பொருள்களைக் கொண்டுவர முயற்சிப்பதால் குடாநாட்டில் நிவாரண நடவடிக்கைகள் பாதிப்படையலாம் என செயலக வட்டாரங்களில் அஞ்சப்படுகிறது.

உடுப்பிட்டி பல நோ. கூ. சங்கம் குறைந்த செலவில் பொருள்களை கப்பல் மூலம் பெற்று மக்களுக்கு குறைந்த விலையில் விற்க நடவடிக்கை எடுத்துள்ளது.

இதனையடுத்து மேலும் சில கூட்டுறவுச் சங்கங்கள் இவ்வாறு பொருள்களைக் கொண்டுவர யாழ் செயலகத்தின் அனுமதியைக் கோரியுள்ளதாகவும் இதனால் நிவாரணப்பொருள்களைக் குறைந்த அளவிலேயே பெற

— 04 ஆம் பக்கம் பார்க்க

## முல்லையில் கடற்படை தாக்கு இரு மீனவர் படுகாயம்

முல்லைத்தீவுக் கடற் பிராந்தியத்தில் ஸ்ரீலங்கா கடற்படையினரின் நடமாட்டம் அதிகரித்துக் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்று அதிகாலை ஒரு மணியளவில் மீன் பிடித்துக் கொண்டிருந்த படகு மீது கடற்படையினர் மேற்கொண்ட தாக்குதலில் படகு சேதமடைந்ததுடன் அதில் இருந்த இருவரும் பலத்த காயமடைந்தனர்.

செல்வபுரத்தைச் சேர்ந்த இராசதுரை சிறி (26), எஸ். குட்டி (20) என்பவர்களே இத் தாக்குதலில் காயமடைந்தவர்களாவர். (70)

### முரசொலிக் கடிதத்தின் பயன்

## சம்பந்தப்பட்ட மாணவர் மீது கடும் நடவடிக்கைக்கு உத்தரவு

பல்கலைக்கழக மாணவர்களால் துன்புறுத்தப்பட்ட மாணவி முரசொலி ஆசிரியருக்கு எழுதிய கடிதம் பல்கலைக்கழக அதிகாரிகளின் கவனத்தை ஈர்த்துள்ளது.

இக்கடிதம் பிரசுரமான நேற்றைய தினம் பல்கலைக்கழக நிர்வாகம் துரித நடவடிக்கையில் இறங்கியுள்ளதாகத் தெரிகிறது.

இது சம்பந்தமாக முழு அளவிலான விசாரணை நடத்தும்படி நிர்வாகம் உத்தரவிட்டுள்ளதாகவும், குற்றங்கள் நிரூபிக்கப்படுமிடத்து சம்பந்தப்பட்டவர்கள் கடுமையாகத் தண்டிக்கப்படுவார்கள் எனவும் பல்கலைக்கழக

## கொழும்பில் வாகனங்கள் குறித்து பொலிஸார் எச்சரிக்கை

கொழும்பு நகரில் வீடுகளுக்கு முன்பாகவோ, அல்லது ஹோட்டல்கள், மற்றும் பொது இடங்களுக்கு முன்பாக பல மணிநேரம் நிறுத்திவைக்கப்பட்டிருக்கும் வாகனங்கள் தொடர்பாக எச்சரிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு எந்த வாகனமும் பலமணிநேரம் ஓரிடத்தில் நிறுத்தப்பட்டு, வாகன உரிமையாளர் அடையாளம் காணப்படாவிட்டால், அவ் வாகனம் பொலிஸாரால் அகற்றப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## அம்பாறை, மட்டக்களப்பில் சுற்றிவளைத்துத் தேடுதல்

அம்பாறை, மட்டக்களப்பு பகுதிகளில் கடந்த சில தினங்களாக படையினர் தேடுதல் நடவடிக்கையை மேற்கொண்டு வருகின்றனர்.

தேடுதலின் போது குண்டு வன்னை மூள்ளதாகவும் மண்டூர் இராமத்தை சுற்றிவளைத்த அதிரடிப்படையினர் 250 தமிழர்களை கைது செய்துள்ளதாகவும் அங்கிருந்து வருவோர் தெரிவிக்கின்றனர்.

## ஒழுக்க வாரம் ஏற்பாடு கல்விப்பணிப்பாளர் முயற்சி

வெடிப்புச்சத்தங்களும் கேட்ட

(38)

யாழ்மாவட்டப்பாடசாலை கள் மத்தியில் மாணவ மாண விகளிடையே ஒழுங்கான பழக்கவழக்கங்களைப்பேணும் வகையில் ''ஒழுக்க வாரம்'' ஒன்று ஏற்படுத்தப்படவுள்ள தாக கல்விப்பணிப்பாளர் இரா. சுந்தரலிங்கம் தெரிவித் தார்.

இதன் மூலம் மாணவர்கள் ஒழுக்கத்தை வாழ்க்கையில் கடைப்பிடிக்க ஏதுவாக இருக்கும் எனவும் சமுதாயத் தின் ஒழுக்கத்தைப் பேண லாம் எனவும் அவர் தெரிவித் தார். (ய11)

## உலர் உணவு அட்டைகளை மீள ஒப்படைக்கக்கோரிக்கை

உலர் உணவு அட்டைகள் மீள் பரிசீலனைக்காக, சகல ரும் தமது அட்டைகளை கிராமசேவையாளரிடம் ஒப் படைக்குமாறு யாழ் செயல கம் அறிவித்துள்ளது.

வெளிநாடு சென்றவர்கள் வெளி இடங்களுக்கு இடம் பெயர்ந்து சென்றவர்களின் அட்டைகளை வைத்துச் சிலர் உணவுப் பொருள் எடுத்து வருவதாக வந்த புகார்களை அடுத்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாகத் தெரிவிக் கப்படுகிறது.

கிராம சேவகர்களால் மீள் பரிசீலனை செய்த பின்னர் அவை உரியவர்களுக்கு வழங் கப்படும் எனவும் தெரிவிக்கப் படுகிறது. (33)

## இந்து இளைஞர் கட்டிடத்தில் இராணுவம் தங்கியுள்ளது

மட்டக்களப்பு இந்து இளைஞர் மன்றக் கட்டடத் தில் தங்கியுள்ள இராணுவத் தினர் வெளியேற்றப்படுவர் என ஜனாதிபதி உறுதி கூறி யும் இன்னமும் அங்கிருந்து படையினர் வெளியேற்றப்பட வில்லை எனத் தெரிவிக்கப் படுகிறது.

இது குறித்து இந்து சமய நிறுவனங்களும், மட்டக் களப்பு மாவட்ட எம். பிக்க ளும் ஜனாதிபதிக்கு வேண்டு கோள் விடுத்தும் எதுவித நடவடிக்கையும் எடுக்கப்பட வில்லை.

இதனால் சமயப் பணிகள், நிவாரணப் பணிகள் செய்ய முடியாதிருப்பதாகவும் தெரிய வருகிறது.

## விவசாய உபகரணங்களே லங்காசிறி கப்பலில் வந்துள்ளன

அமெரிக்கக் குடியரசினால் யாழ் குடா நாட்டு விவசாயி களுக்கு வழங்கவென ஒரு தொகுதி உதவிப் பொருள் கள் ''லங்காசிறி'' கப்பல் மூலம் அனுப்பப்பட்டுள்ளன.

உரவகைகள், தண்ணீர் இறைக்கும் இயந்திரங்கள், மருந்து வகைகள் ஆகிய பொருள்களே கொண்டுவரப் பட்டுள்ளன.

இவை குடாநாட்டில் தேர்க் தெடுக்கப்படும் விவசாயி

— 04 ஆம் பக்கம் பார்க்க

## மதவாச்சியில் யாழ் அரச அதிபர் திருப்பி அனுப்பப்பட்டார்!

கொழும்பிலிருந்து யாழ்ப் பாணம் வந்து கொண்டிருந்த யாழ் அரச அதிபர் அன்ரன் அல்பிரெட் நேற்று மதவாச் சியில் வைத்து இராணுவத் தினரால் திருப்பி அனுப்பப் பட்டுள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது.

வவுனியாப் பகுதியில் பதற் றம் நிலவியதாலேயே இவர் திருப்பி அனுப்பப்பட்டதாகக் கூறப்படுகிறது. (70)

பருத்தித்துறைக் கடலில்

## கடற்படையினர் தாக்கியதால் படகு சேதம்; மீனவர் பலி?

பருத்தித்துறை கற்கோவ ளம் கடற்பகுதியில் மீனவப் படகு ஒன்று கடற்படை பிரங்கித் தாக்குதலில் சேத மடைந்தது.

நேற்று முன்தினம் இரவு 9மணியளவில் அக்கடற் பகு தியில் சென்ற இப்படகு மீது பரா' வெளிச்சத்தின் உதவி யுடன் கடற்படையினர் ஷெல் தாக்குதலை மேற்கொண்ட தில் படகு முற்றாக எரிந்து சேதமானது.

படகில் சென்றவர்கள் இன் னமும் கரை சேரவில்லை யென்றும் இவர்களுக்கு என்ன நடந்தது என தெரியாதிருப் பதாகவும் தெரிவிக்கப்படுகி றது. (38)

## ஆயுர்வேத மருந்துகளும் வடக்கேவர அனுமதி இல்லை

யாழ் மாவட்டத்தில் உள்ள சித்த ஆயுர்வேத வைத்திய சாலைகளுக்கும் கொழும்பி லிருந்து கடந்த 9மாத கால மாக மருந்து வகைகள் எது வுமே அனுப்பப்படவில்லை.

ஆங்கில மருந்துகளைத் தடை செய்யும் கூட்டுப்படை அலுவலகம் சுதேச வைத்தி யத்தையும் விட்டு வைக்க வில்லை என ஆயுர்வேத வைத்தியசாலை வட்டாரங் கள் தெரிவிக்கின்றன.

அரசு சுதேச வைத்தியத் துறையை வளர்க்க நட

— 04 ஆம் பக்கம் பார்க்க

## பாம்புசூப், பல்லி வடகத்திற்கு கொழும்பில் கிராக்கி அதிகம்

பாம்புக்கறி உணவு முக்கியமாக பாம்புசூப் ஆண்மையை அதிகரிக்கச் செய்யும் என்பது சீனாவில் காலம் காலமாக இருந்து வரும் நம்பிக்கை.

இப்பொழுது இந்த உணவு கொழும்பில் 500 ருபாவுக்கு கிடைக்கிறதாம்.

இங்குள்ள வெளிநாட்டு ஆசாமிகள் குறிப்பாக சீனர்களும் தாய்வான்காரர்களும் இதற்காக 'நாயாக' அலைகிறார்கள்.

பாம்பு சூப்பை ருசிக்காக மட்டுமல்ல ஆரோக்கியத்துக்காகவும் சாப்பிடுவது சீனர்களின் பழக்கம். குளிர் காலம் துவங்கியதும் நன்றாகக் கொதிக்க வைத்த பாம்பு சூப்பில் ஒருகப் அருந்தி விட்டால் சீஸன் முழுவதும் குளிர் தெரியாமல் உடம்பின் உஷ்ணநிலை சீராக வைக்கப்படுமாம்.

பாம்பு ஊறுகாய், பாம்பு புரியாணி, பல்லிவடகம், இப்படி இப்போது புதுப்புது 'அயிட்டங்கள்' எல்லாம் கொழும்பில் விற்பனைக்கு வந்து கொண்டிருக்கின்றனவாம்.

# தாய்வானில் ஆறாயிரம் இலங்கையர்கள் போலிப்பத்திரங்களுடன் வேலை செய்கின்றனர்!!

ஆறாயிரம் இலங்கையர்கள் தாய்வானில் போலிப் பிரயாணப் பத்திரங்களுடன் இருப்பதாகத் தாய்வான் அரசு இலங்கை அரசுக்கு அறிவித்துள்ளது.

இவர்களில் பலர் வேலைசெய்து கொண்டிருப்பதாகவும், ஆனால் சட்டபூர்வமான பிரயாணப் பத்திரங்கள் இவர்களிடம் இல்லாததால் இவர்கள் நிலை நிச்சயமற்றதாக இருக்கிறதெனவும் தாய்வான் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இலங்கையிலிருந்து மேற்கு நாடுகளுக்குச் செல்லும் நோக்குடன் புறப்பட்ட இவர்கள் இடையில் ஏற்பட்ட பிரயாணத் தடங்கல்கள் காரணமாக, போலிப்பத்திரங்களைத் தயாரித்துக் கொண்டு தாய்வானில் தங்கித் தொழில் செய்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

## மக்கள்மயப்படுத்தும் பட்டியலில் இலங்கைவங்கி இல்லையாம்

இலங்கை வங்கியை மக்கள் மயப்படுத்தும் நோக்கம் அரசுக்கு இல்லை என அறிவிக்கப்பட்டுள்ளது.

உலக வங்கி, மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி என்பனவற்றிடமிருந்து எந்தவித பொருளாதார நிபந்தனைகளையும் ஏற்று அரசு பெரும் தொகைப் பணத்தைக் கடனாகப் பெற்றுள்ளது.

இதனால் குறிப்பிட்ட சில சபைகளையும் அரச சார்பு நிறுவனங்களையும், கூட்டுத் தாபனங்களையும் அரசு குறிப்பிட்ட வங்கிகளின் வற்புறுத்தலின் பேரில் மக்கள் மயப்படுத்தியும், முடியும் வருகின்றது.

இந்த வகையிலேயே இலங்கை வங்கியும் மக்கள் மயப்படுத்தப்படவுள்ளதாக வெளியான செய்தியை அடுத்தே அப்படியான ஒரு நோக்கம் அரசுக்கு இல்லை என இலங்கை வங்கித் தலைவர் தெரிவித்திருக்கிறார்.

## ரஞ்சனுக்கு டக்ளஸ் புகழாரம்

"அமரர் ரஞ்சன் விஜேரட்ன அப்பாவி அகதிகள் மேல் மிகுந்த கரிசனை உடையவராக இருந்தார்."

இவ்வாறு ஈழமக்கள் ஜனநாயகக் கட்சித் தலைவர் டக்ளஸ் தேவானந்தா சண்டே ஒப்சேவருக்கு அளித்த பேட்டியில் குறிப்பிட்டுள்ளார்.

"மன்னாரைச் சுற்றி வர உள்ள பகுதிகள் எல்.ரி.ரி.ஈயின் பலம் வாய்ந்த அரண்களாக இருப்பதினால், புலிகளை அங்கிருந்து வெளியேற்றுவதற்கு பெரும் அளவிலான இராணுவ நடவடிக்கை தேவை" என அவர் இப்பேட்டியில் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

"இராணுவ ரீதியில் எல்.ரி.ரி.ஈ. முற்றுமுழுதாக அழிக்கப்பட்டால் அன்றி வட, கிழக்கில் அரசியல் நடவடிக்கைகள் வெற்றி அளிக்க மாட்டா" எனக் குறிப்பிட்ட அவர் எல்.ரி.ரி.ஈ இராணுவ ரீதியில் தோற்கடிக்கப்பட்டாலன்றி இடைக்கால நிர்வாக ஒழுங்குகள் எதுவும் பயனளிக்க மாட்டா" எனவும் தொடர்ந்து கூறினார்

## பல அரச அலுவலகங்களில் காகிதாதிகளுக்கு பலத்த தட்டுப்பாடு

யாழ் மாவட்டத்திலுள்ள பல அரச அலுவலகங்களில் அத்தியாவசியமாகத் தேவைப்படும் பல படிவங்கள் கூட தட்டுப்பாடாக உள்ளது.

இதனால் உடனுக்குடன் செய்ய வேண்டிய பல கடமைகளை நிறைவேற்ற முடியாத நிலை பல திணைக்களங்களில் காணப்படுகின்றது.

தட்டெழுத்துக் கடதாசி, றோனியோ கடதாசி, மற்றும் எழுதும் கடதாசிகள், பேனா, பென்சில் போன்ற அலுவலக உபயோகத்திற்குத் தேவையானவை முடிவுற்ற நிலையில் பல திணைக்களங்கள் காணப்படுகின்றன. (ப-1)

## சர்வதேசப் போட்டிகளில் மே. இ. தீவுகள் அணி வெற்றி

மேற்கிந்திய தீவுகள் அணிக்கும், அவுஸ்திரேலிய அணிக்கும் இடையில் நேற்று முன்தினம் நடைபெற்ற சர்வதேச, மூன்றாவது ஒருநாள், மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் கிரிக்கெட் போட்டியில் மேற்கிந்தியத்தீவுகள் அணிவெற்றி பெற்றது

இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி 49 ஓவர்களில் 201 ஓட்டங்களைப் பெற்று ஆட்டம் இழந்தது

அதனைத் தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத்தீவுகள் அணி 36 ஓவர்களில் ஏழு இலக்குகளைப் இழந்து 181 ஓட்டங்களை பெற்றிருக்கையில், மழையின் நிமித்தம் ஆட்டம் இடைநிறுத்தப்பட்டது. இவ்விதம் ஆட்டம் இடைநிறுத்தப்பட்டமை மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு ஒருவகையில் சாதகமாக அமைந்து விட்டது.

இந்நிலையில் சராசரி ஓட்ட எண்ணிக்கை மேற்கிந்திய தீவுகள் அணி, ஓவர் ஒன்றிற்கு 5.03 ஆகவும், அவுஸ்திரேலிய அணிக்கு 4.1 ஆகவும் இருந்ததினால், மேற்கிந்தியத் தீவுகள் அணியே வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது.

ஒருநாள் போட்டித் தொடரில் இதுவரை நிறைவுபெற்ற மூன்று போட்டிகளில் அவுஸ்தி

## கணித, விஞ்ஞான ஆசிரியர்களுக்கு விசேட பிரயாணப்படி கிடைக்கும்

அரசாங்க ஊழியர்களுக்கு வழங்கப்படுவது போன்ற பிரயாணப்படி ஆசிரியர்களுக்கும் வழங்கப்படவுள்ளது.

தூர இடங்களில் உள்ள பாடசாலைகளில் விஞ்ஞானம், கணிதம் ஆகிய பாடங்களை கற்பிக்கும் ஆசிரியர்களுக்கே இந்த பிரயாணப்படி வழங்கப்படவுள்ளது.

இதற்கான மேலதிக நிதி சம்பந்தப்பட்ட மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர்களின் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட நிதியிலிருந்து பெறப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## வி. எஸ். பர்மா இந்தியாவில் மரணம்

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் ஹிந்தி சேவை அறிவிப்பாளரும், தயாரிப்பாளருமாகிய வி. எஸ். பர்மா நேற்று முன்தினம் இந்தியாவில் மரணமானார். சிறுநீரக மாற்று சத்திர சிகிச்சைக்காக இவர் இந்தியாவுக்கு சில தினங்களுக்கு முன்னர் சென்றிருந்தார்.

## சிப்பாய் சுட்டு சிங்களவர் காயம்

கடந்த வாரம் வவுனியா தாண்டிக்குளம் பகுதியில் இராணுவத்தினரின் துப்பாக்கிப் பிரயோகத்தில் சிங்கள லொறிச் சாரதி ஒருவர் படுகாயமடைந்தார்.

இச் சம்பவத்தின் போது பாதசாரிகள் சிலரும் காயமடைந்ததாகக் கூறப்படுகிறது.

இத் தாக்குதலின் போது லொறியும் சேதமடைந்தது. (70)

## தென்பகுதியில் மினிசினிமாக்கள்

தென் பகுதியில் கிராமங்களில் மினி சினிமா தியேட்டர்களை அமைக்கும் முயற்சியில் திரைப்படக் கூட்டுத்தாபனம் ஈடுபட்டுள்ளது.

இந்த மினி தியேட்டர்கள் ஒவ்வொன்றும் 300 ஆசனங்களை உடையவையாக அமைக்கப்படும். அத்துடன் நடமாடும் மினி தியேட்டர் சேவைகளையும் கிராமப்புறங்களில் செயற்படுத்தப் போவதாக திரைப்படக் கூட்டுத்தாபனம் அறிவித்துள்ளது.

தென் பகுதி இளைஞர்களை திசை திருப்பும் நடவடிக்கையாக இது அமைந்துள்ளதாக சிங்களப் பத்திரிகை ஒன்று குறிப்பிட்டுள்ளது.

### சிறு விளம்பரம்

**விற்பனை**

பிரசோற்பத்தி வருஷத்திற்கான பஞ்சாங்கம் வெளிவந்து விற்பனையாகின்றது. இரகுநாத ஐயரின் வாக்கிய பஞ்சாங்கம், திருக்கணித ஐயரின் திருக்கணித பஞ்சாங்கம், வியாபாரிகள் பெற்றுக் கொள்ளலாம். விற்பனையாளர்கள்: பூபாலசிங்கம் புத்தகசாலை யாழ்ப்பாணம்.

03067

**தவறிவிட்டது**

வேலுப்பிள்ளை வீரகத்தி இராமநாதன் 235/1 ஏத்துக்கால் நீர்கொழும்பு விலாசமிடப்பட்ட கட்டிடத் திணைக்களத்திற்கான ஒப்பந்தக்காரர் பதிவுப் புத்தகம் (சிவப்பு நிற மட்டையுடனானது) 12-ம் திகதி கோப்பாய்க்கும் கச்சேரிக்குமிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தோர் வீ வீ இராமநாதன், "பாக்கிய பவனம்", கல்லூரி வீதி, பருத்தித்துறை என்ற விலாசத்துடன் தொடர்பு கொள்ளவும்.

03071

### மாணவருக்கு அன்பளிப்பு

யாழ்ப்பாணக் கல்லூரியில் கனேடிய புலமைப் பரிசில் பெற்ற மாணவர்களுக்கு பெறுமதிவாய்ந்த பாடசாலை உபகரணங்கள் ஜி இராசநாயகம் என்பவரால் நேற்றுக் காலை கல்லூரியில் வைத்து வழங்கப்பட்டன (ப-11)

## ரஞ்சனுடன் கொல்லப்பட்ட படையினரின் பிள்ளைகளுக்கு 18,750 ரூபா நஷ்டஈடு

அமைச்சர் ரஞ்சனுடன் கொல்லப்பட்ட ஏழு பாதுகாப்பு படையினருக்கும் அரசு பதினைருக்கு தலா எழுபத்தி ஐயாயிரம் ரூபா நஷ்டஈடாக வழங்கப்பட்டுள்ளது.

### முறைசாரா கண்காட்சி

முறைசாராக் கல்விப் பிரிவின் உபவளக் கண்காட்சி நாளை 13 ஆம் திகதிவேலணை சேர்வைத்திலிங்கம் துரைச்சாமி வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இக் கல்விக் கண்காட்சியில் உளளூர் மூலவளங்களைக் கொண்டு ஆரம்பிக்கக் கூடிய சுயதொழில் பற்றிய கண்காட்சியும், முறைச்சாராக் கல்வி

சாலை யாழ்ப்பாணம்.
03067

விலாசத்துடன் தொடர்பு கொள்ளவும். 03071

## காலமானார்

### திருமதி செல்வகுமாரி இரவீந்திரன்

இவர் காலஞ்சென்ற திரு. சின்னத்துரையின் அன்பு மகளும், திருமதி சின்னத்துரையின் அன்பு மகளும், காலஞ்சென்ற இரவீந்திரனின் அன்பு மனைவியும், திருமதி தவரத்தினமணி கயிலைநாதர் (ஆசிரியை நாவேஸ்வரி வித்தியாசாலை சுன்னாகம்), திருமதி சிவபாக்கியம், தங்கராஜா, திரு. நாகரட்ணம் (கனடா), திரு. முத்துலிங்கம் (கனடா), தி. கனகரட்ணம் (கனடா), திருமதி இராஜலட்சுமி, சிவகணேசன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், திரு. கயிலைநாதர் (ஆசிரியர்), திரு. தங்கராஜா, திரு. சிவகணேசன், திருமதி விமலேஸ்வரி, நாகரட்னம், திருமதி கமலலட்சுமி முத்துலிங்கம், திருமதி ராதா, கனகரட்னம் ஆகியோரின் மைத்துனியும், தேன்மதி, நிரஞ்சன் கனடா), சசிகுமாரி (கனடா), விஜேந்திரகுமார (கனடா), வசிந்தகுமார், பகீர்த்தகுமார், சிவதீபன், ராஜதீபன், லதாதீபன் ஆகியோரின் சிறிய தாயாரும், பிரியசாந்தன், பிரிதாயினி, நிரதா, சிறீகணன், சிறீசேந்தன், தரிஸிகா விதுர்சன் ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 12. 3. 1991 செவ்வாய்க்கிழமை ஐயனார் கோவிலடி மல்லாகத்தில் நடைபெற்றன.

தகவல்:
திரு: ஆ. சிவகணேசன்
(மைத்துனர்)

ஐயனார்கோவிலடி,
மல்லாகம்.

03061

ஒருநாள் போட்டித் தொடரில் இதுவரை நிறைவுபெற்ற மூன்று போட்டிகளில் அவுஸ்திரேலியா இரண்டு போட்டிகளிலும், மேற்கிந்தியத் தீவுகள் ஒரு போட்டியிலும் வெற்றி பெற்றுள்ளது. (16)

அமைச்சர் ரஞ்சனுடன் கொல்லப்பட்ட ஏழு பாதுகாப்பு படையினருக்கும் அரசு நஷ்டஈடு மற்றும் நன்கொடைகளை வழங்கியுள்ளது.

கொல்லப்பட்ட திருமணமாகாத படையினரின் குடும்பத்தினருக்கு தலா எழுபத்தி ஐயாயிரம் ரூபா நஷ்டஈடாக வழங்கப்பட்டுள்ளது.

திருமணம் முடிந்த படையினரின் மனைவிமாருக்கு எழுபத்தி ஐயாயிரம் ரூபாவும் அவர்களின் ஒவ்வொரு பிள்ளைகளுக்கும் 18,750 ரூபாவும் வழங்கப்பட்டுள்ளன

கொண்டு ஆரம்பிக்கக் கூடிய சுயதொழில் பற்றிய கண்காட்சியும், முறைச் சாரா கல்வி மாணவர்களால் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களின் கண்காட்சியும், விற்பனையும் நடைபெறும் என அறிவிக்கப்படுகின்றது. (70)

## பம்பலப்பிட்டி கதிரேசன் ஆலயம் புதிய உருவில் மறு சீரமைப்பு

பம்பலப்பிட்டியிலுள்ள புதிய கதிரேசன் ஆலயம் புதிதாக அமைக்கப்பட்டு வருகின்றது.

மற்றைய இந்து ஆலய அமைப்புக்களிலிருந்து வேறுபட்டதாக இந்த ஆலயம் அமைக்கப்படுகின்றது.

காற்றோட்டமுள்ளதாகவும், வெளிச்சமுள்ளதாகவும், சுத்தமாகப் பராமரிக்கக்கூடியதாகவும் இப்புதிய கட்டிட அமைப்பு அமைந்துள்ளது.

எனினும் ஆகமவிதி முற்றுமுழுதாக கடைப்பிடிக்கப்பட்டே இவ்ஆலயம் அமைக்கப்படுவதாக கட்டிட அமைப்பு வேலைகளைப் பொறுப்பேற்றுள்ள கட்டிடக்கலைஞர் வி. எஸ். துரைராஜா தெரிவித்தார். (34)

## புலமைப்பரீட்சை 30 இல் நடைபெறும்

வடக்கு கிழக்கு பகுதிகளில் நடைபெறாது போன ஐந்தாம் வகுப்பிற்கான புலமைப் பரிசில் விசேட பரீட்சை இம்மாதம் 30ஆம் திகதி நடாத்தப்படுமென பரீட்சை ஆணையாளர் நேற்று உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளார்.

## கோழை பல தடவை இறப்பான் என்கிறார் ஜே.ஆர். ஜெயவர்த்தனா

ஜே. ஆர். ஜெயவர்த்தனா இறந்துவிட்டதாக பரவிய வதந்தியை ஊர்ஜிதப்படுத்துவதற்காகக் கொழும்புப் பத்திரிகைகள் முண்டியடித்து ஜெயவர்த்தனாவின் வீட்டுக்குத் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்ட போது "கோழைதான் தாம் இறப்பதற்கு முன்பாக பல தடவை இறப்பான்" நான் இறக்கவில்லை தேறி வருகிறேன் என்று பதிலளித்தார் முன்னாள் ஜனாதிபதி.

## உடுவில் பாடசாலைகளில் வீட்டுத் தோட்டப் போட்டி

உடுவில் கோத்தணிப் பாடசாலை மாணவர்களுக்கு இடையேயான வீட்டுத் தோட்டப்போட்டி ஒன்றினை இணுவில் பரமானந்தா சனசமூக நிலையம் நடத்த திட்டமிட்டுள்ளது.

வீட்டுத்தோட்ட பயிர் வளர்ப்பினை மதிப்பீடு செய்வதன்மூலம் போட்டியில் கலந்து கொள்ளும் மாணவர்களுக்கிடையில் பரிசுக்கான தெரிவுகள் நடைபெற உள்ளன

ஆண்டு 6 — 8 வரை கீழ்ப் பிரிவாகவும் 9 — 10 மத்திய பிரிவாகவும் 11, 12, 13 மேற் பிரிவாகவும் பிரிக்கப்பட்டு போட்டிகள் நடைபெற உள்ளன.

இதற்கான விண்ணப்பப்படிவங்களை இணுவில் பரமானந்தா சனசமூக நிலையத்தில் பெற்று 31ஆம் திகதிக்கு முன் விண்ணப்பிக்க வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (ப-10)

# மத்தியகிழக்கு நாடுகளுக்கு மீள திரும்புவோருக்கு

# இலவச பயணச் சலுகை வழங்க அரசு முடிவு!

மத்திய கிழக்கு நாடுகளுக்கு மீண்டும் திரும்பிச் செல்லவுள்ளவர்களுக்கு அரசாங்கம் இலவச விமான ரிக்கட்டுக்களை வழங்கவுள்ளது.

ஏற்கனவே மத்திய கிழக்கு நாடுகளில் பணிபுரிந்து யுத்தம் காரணமாக நாடு திரும்பியவர்கள் மீண்டும் மத்திய கிழக்கு நாடுகளுக்குத் தொழில் வாய்ப்புப் பெற்றுச் செல்ல விரும்பினால் இந்த இலவச விமானப்பயண வசதி வழங்கப்படுமெனத் தொழிற்பயிற்சி அமைச்சர் அறிவித்துள்ளார்.

மத்திய கிழக்கு யுத்தம் காரணமாக ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட இலங்கைத் தொழிலாளர்கள் தொழில் இழந்து நாடு திரும்பியிருந்தனர்.

இவர்களில் பலர் யுத்த சூழ்நிலையைப் பயன்படுத்தி அவர்களின் தொழில்வழங்கு நிறுவனங்களினால் ஏமாற்றப்பட்டு, உரிய கொடுப்பனவுகள் எதுவுமின்றி இங்கு திரும்பியிருந்தனர்.

குவைத்தில் பணிபுரிந்து தொழிலிழந்து நாடு திரும்பிய இலங்கையர்களுக்கு நிவாரணம் வழங்கச் சர்வதேச தொழில் ஸ்தாபனம் நடவடிக்கையெடுத்துள்ளமையும், குவைத்தில் இதுவரை பதினெட்டு நாடுகளின் தூதுவராலயங்கள் மீளத் திறக்கப்பட்டுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கன. (16)

## 'நிழல் நிஜத்தைக் கலைத்தது'

இவர்கள் ஆட்சியில் நடக்க இருந்தவை ஆயிரம், ஆயிரம்! நடந்தவை கலைஞர் பாடிய பாயிரம்! ஒரு நிழல் நிஜத்தைக் கலைத்திருக்கிறது. கலைத்தது ஆட்சியை அல்ல - தமிழ் நாட்டின் அமைதியை. பாலஸ்தீன விடுதலைக்கு இந்தியா ஆதரவளிக்கும் கறுப்பின மக்களுக்காகக் குரல் கொடுக்கும், குண்டு வீசப் புறப்படும் அமெரிக்க விமானங்களுக்குக் கூட பெற்றோல் கொடுக்கும். ஆனால், இலங்கையில் காயம்பட்டுக் கண்ணீர் விட்டு வரும் எம் தமிழர்களுக்கு வெறும் ஆறுதல் சொல்லக் கூட - தமிழனின் ஆட்சி கலைக்கப்படும் என்றால் - ஆழமாகப் பதிந்த இந்த வடு, தமிழர் நெஞ்சை விட்டு ஒரு போதும் நீங்காது. வெற்றி வாய்ப்பைப் பற்றி எந்த யூகத்தையும் நான் சொல்ல விரும்பவில்லை."

தமிழக ஆட்சிக் கலைப்புப் பற்றி கவிஞர் மு.மேத்தாவின் கருத்து இது.

## குதிரையின் கனைப்பொலி குறைகிறது! நெடுந்தீவின் தனித்துவம் மங்குகிறது!!

நெடுந்தீவில் குதிரை இனம் தற்போது அருகிவருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

முன்னர் நெடுந்தீவில் ஆயிரக் கணக்கில் குதிரைகள் காணப்பட்டன. ஆனால் தற்பொழுது இருநூறுக்கும் குறைவான குதிரைகள் மட்டுமே அங்கு எஞ்சியுள்ளன.

நெடுந்தீவிலிருந்து வியாபார நோக்கத்தோடு குதிரைகள் ஏற்றுமதி செய்யப்பட்டமை, போதிய பராமரிப்பின்மை போன்ற காரணங்களால் அங்கு குதிரை இனம் அருகி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

குதிரைகள் நீர் பருகவென நெடுந்தீவின் பல பகுதிகளிலும் முன்னர் இராமசபையினால் பொதுக் கேணிகள் அமைக்கப்பட்டு இருந்தன. இவை தற்போது தூர்ந்து போய் குதிரைகள் தாகத்தீர்த்துப்போகுமளவு தண்ணீர் பெறமுடியாத நிலை உள்ளமையும் ஒரு காரணமாகச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

## மகாப்பொல புலமைப்பரிசு வழங்கல் 31 ஆம் திகதி குருநாகலில் இடம் பெறும்

மகாப்பொல உயர்புலமைப் பரிசு வழங்கும் வைபவம் இம் மாதம் 31 ஆம் திகதி குருநாகலில் இடம் பெறவுள்ளது.

இந்தப் பத்தாவது மகாப்பொல புலமைப் பரிசு வழங்கும் வைபவத்தில் வைத்து நாடெங்கணுமிருந்து 1989-90 ஆம் கல்வி ஆண்டுக்குப் பல்கலைக்கழகத்திற்கு அனுமதிக்கப்பட்டோரில் தெரிந்தெடுக்கப்பட்ட 3500 மாணவர்களுக்குப் புலமைப் பரிசில் வழங்கப்படவுள்ளது.

புலமைப்பரிசு பெறத்தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு அதற்கான அனுமதிக் கடிதங்கள் ஏற்கனவே அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## மாத்தறையில் 'வீரபாகுகம'; கட்டிக் கொடுக்கிறார் 'தமிழர்'

பிரபல வர்த்தகராகஇருந்து இறந்த தமது தந்தையின் நினைவாக அவரது புதல்வர்களால் 'வீரபாகுகம' என்ற கிராமம் உருவாக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

இதில் குறிப்பிடப்படவேண்டிய அம்சம் பிரபல வர்த்தகர் தமிழர் என்பதே என்றும் தெரிவிக்கப் படுகின்றது எம். ராமசாமிப்பிள்ளை என்பவரே பிரபல வர்த்தகராவார்.

வீரபாகுகம என்ற இக்கிராமத்தை ஜனாதிபதி, ரணசிங்க பிரேமதாஸ மாத்தளை பிரதேசத்தில் கிராம எழுச்சித் திட்டத்தின் கீழ் திறந்துவைத்துள்ளார். 82 வீடுகளைக் கொண்டது இக் கிராமம்

## 'ரஞ்சனின் கடூரமான சொற்பிரயோகங்கள் அவருக்குப் பல எதிரிகளை உருவாக்கின'

"ரஞ்சன் விஜேரத்னாவின் கடூரமான வார்த்தைப் பிரயோகங்கள் அவருக்கு எதிரிகளைச் சம்பாதித்துக் கொடுத்தன" என்று கொழும்பு நாளிதழ் ஒன்று தனது வாரவெளியீட்டு விமர்சனத்தில் கூறியுள்ளது.

அதில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது: "அவர் ராஜதந்திரம் என்பதை உயர்த்திப் பிடிக்கவில்லை. இலங்கைக்கும், இந்தியாவுக்கும் இடையிலான உறவுகள் மிகவும் கீழ்நிலையில் இருந்தபோது தான் அவர் வெளியுறவு அமைச்சராகப் பதவி வகித்தார். அப்போது கூட கடூர வார்த்தைப் பிரயோக சுபாவத்தை அவர் மாற்றிக் கொள்ளவில்லை."

"நாம் நடத்துவது போர்". போரிலே குடிமக்களும் கொல்லப் படுகிறார்கள்' என அவர் அடிக்கடி பத்திரிகையாளரிடம் கூறினார். அவரது தயையற்ற அணுகுமுறை நாட்டில் உள்ள மிதவாத மற்றும் மனித உரிமைக் குழுக்களைக் கவலை அடைய வைத்தது.

"இராணுவம் செய்ததாகக் கூறப்படும் அத்துமீறல்கள் தொடர்பான கண்டனங்களை எல்லாம் தானே பொறுத்துக்கொள்ள வேண்டியிருந்த போதிலும், தனது படைவீரர்களுக்கு உறுதுணையாக அவர் நின்றார். முதலில் தெற்கிலே 60 ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள்

## மீண்டும் சேவை புரிய பலர் விண்ணப்பம்

யாழ் மாவட்டத் தபாலகங்களில் பல வருடங்கள் சகத் தபால் உத்தியோகத்தர்களாகக் கடமையாற்றி அரசின் சுயவிருப்ப ஓய்வூதியத் திட்

## தேன்பொந்தில் இருகடிதங்கள்

"திருக்கேதீசுவர தலத்தைத் தேன்பொந்து என்று குறிப்பிட்டிருக்கின்றார் நாவலர். கருதநின்ற கேதீச்சரம் கைதொழக் கடுவினையடையாவே என்பது சம்பந்தர் வாக்கு.

திருக்கேதீசுவர நாதரை நினைத்தால், புகழைப் பேசினால், தரிசிக்கும் பாக்கியத்தைப் பெற்றால் மனசுக்கு மிகவும் இனிமையாக இருக்கும். தேன், நோய் நிவாரணி. அதுபோலத் தேன்மயமாக எழுந்தருளியிருப்பவரான திருக்கேதீசுவரநாதர் வழிபடுபவர்களின் மலமாகிய நோயைப் போக்கி அருள் புரிகின்றார்.

திருக்கேதீசுவரநாதர் திருவருளினால் சிலகாலம் அங்கே தங்கும் வாய்ப்பு எனக்குக்கிடைத்தது. வழிகாட்டியாயிருந்தவர் நாவலர் பரம்பரை பொன்னாலை உடையார் கு. அருளம்பலம் தமது வாழ்க்கையின் பெரும்பகுதியைக் கேதீசுவரநாதர் திருத்தொண்டுகளுக்கு அர்ப்பணித்தவர். தமது சுகநயங்களைப் பழைய கால முறைப்படி ஏட்டில் எழுதி அனுப்பியுள்ளார். அந்தக்கடித ஏடு இதுதான்."

என்று கூறியவாறு பண்டிதர் ஐயா 15. 01. 84 ஞாயிறு பிற்பகல் (பொங்கல் திருநாளன்று) அதனைத் தந்தார்கள்.

திருக்கேதீஸ்வரம்
8-1-84

என்றும் மறவா அன்பும் சைவப் பண்பும் நிறைந்த சைவப் பெரியார் உயர்திரு இலக்கிய கலாநிதி, பண்டிதமணி ஐயா அவர்கள் திவ்வியபாத கமலங்கட்கு அடியேன் நமஸ்காரம் செய்து எழுதும் விண்ணப்பம்:- மேன்மைதங்கிய ஐயா, இறைவன் அருளாலும், பெரியோராகிய தங்கள் அன்போடு கூடிய நல்லாசியினாலும் அடியேன் சிறிது சுகமுடையேன், 86 வயது அதற்குரிய பெலயீனம், மயக்கம், நடுக்கம், நடக்கமுடியாமை முதலியன உண்டு. ஆனால் கோயிலுக்குப் போய் வருவேன். திருக்கேதீச்சரத்தில் வசிக்கின்றேன். இறைவன் செயல். இங்கே மனநிம்மதியுண்டு நிற்க,

தங்களைத் தரிசிக்க ஆசையுடையேன். பிரயாணஞ் செய்ய முடியாது. அகக்கண்ணால் தரிசிக்கின்றேன். தாங்கள் வயோதிப காலத்தில், உடல் தளர்ந்தாலும் மனம் தளராமல் நாவலர் பெருமானின் அடிச்சுவட்டைப் பின்பற்றி, சைவ சமயத்துக்காகவும், தமிழ்பாஷைக்காகவும்,உழைத்து வருகின்றீர்கள். தங்களின் வாக்கினின் உதித்த புத்தகங்களை வாசிப்பதும், தங்கள் முன் கடிதங்களை வாசிப்பதுவுமே எனது தொழில். இது உண்மை நாவலருக்குப் பின் நீங்களே எமது சமயத்தையும் பாஷையையும் வளர்த்து வருகிறீர்கள். சைவ உலகம் தங்கட்கு என்றும் கடமைப்பட்டுள்ளது.

200 பாடலுக்குக் குறையாமல் 12 திருமுறைகளிலும் தெரிவு செய்து ஓலைச்சட்டத்தில் எழுதி அனுப்புவேன். தாங்கள் நற்சுகவாழ்வு, ஐஸ்வரியம், சகலம்வளர்ந்து, தீர்க்காயுள் என்பவைகளைப் பெற்றுப் பல்லாண்டு நீடு வாழத் திருவருள் செய்து பாதுகாக்கும்படி கௌரியம்பாள் சமேத திருக்கேதீஸ்வரப் பெருமானை, சித்தசுத்தியுடனும், அன்புடனும் பிரார்த்திக்கின்றேன். பெருமான் அருள்புரிவார்.

சுபம்

அன்பு நன்றி மறவாத அடியான்
கு. அருளம்பலம்

என்று அவரது கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது.

பண்டிதர் ஐயா குறித்த கடிதத்துக்குப் பின்வருமாறு பதில் எழுதினார்கள்.

கலாசாலை வீதி,
திருநெல்வேலி.
16-01-84

ஸ்ரீகௌரி அம்பாள் சமேத திருக்கேதீச்சரப் பெருமானின் திருவடிகளை மனதில் இருத்துவோமாக.

மகாராஜஸ்ரீ கு. அ அவர்களுக்கு, என் பணிவான வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். தாங்கள் பக்தி சிரத்தையோடனுப்பிய விபூதி, குங்குமம் திருக்கேதீச்சர அன்னையையும், அப்பனையும் நினைவு கூரச் செய்தன. மிக்க நன்றி.

தபால் உத்தியோகத்தர்களா கக் கடமையாற்றி அரசின் சுயவிருப்ப ஓய்வூதியத் திட் டத்தின் கீழ் ஓய்வு பெற்ற பலர் மீண்டும் ஒப்பந்த அடிப் படையில் கடமையாற்ற விண் ணப்பித்துள்ளனர். (33)

''இராணுவம் செய்ததாகக் கூறப்படும் அத்துமீறல்களை எல்லாம் தானே பொறுத்துக்கொள்ள வேண்டியிருந்த போதிலும், தனது படைவீரர்களுக்கு உறுதுணையாக அவர் நின்றார். முதலில் தெற்கிலே 60 ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் கொலை செய்யப்பட்டனர் அல்லது தடயமேதுமின்றிக் காணாமல் போயுள்ளனர் என எதிர்க் கட்சி அரசியல் வாதிகள் இவர் கணிப்பிடுகின்றனர். பின்னர் வடக்கிலே கண்மூடித்தனமான விமானக்குண்டுவீச்சுத் தாக்குதல்களினால் குடிமக்கள் பலர் பலியாகினர்.''

இவ்வாறு மேற்படி விமர்சனத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 'கைக்கூலி'க்கு முதலிடம்

மருதனாமடம் கோட்டக் கல்விப்பிரிவில் நடாத்தப் பட்ட தமிழ்த்தினப் போட்டி யில் ஊரெழு கணேசவித்தி யாலயத்தின் 'கைக்கூலி' என் னும் நாடகம் முதலிடத்தைப் பெற்றுள்ளது.

## சுயவிருப்பில் ஓய்வு பெற்றோருக்கும் நிவாரணம் வழங்க நடவடிக்கை

சுயவிருப்பின் பேரில் ஓய்வு பெற்றோரில் இருபது வருட சேவையை பூர்த்திசெய்வ தோருக்கு அவர்களின் நிலைமையைக் கருத்திற் கொண்டு இலவச நிவாரணம் வழங்க யாழ் செயலகம் கொள்கைய ளவில் இணங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பத்துவருடத்திற்கும் இருபது வருடத்திற்கும் இடையே யான சேவையைக் கொண் டுள்ள ஊழியர்கள் இத் திட் டத்தின் கீழ் ஓய்வு பெற அரசு அனுமதி அளித்திருந்த போதிலும் அவர்களுக்கான ஓய்வூதிய கொடுப்பனவு இருபது வருட சேவைக்காலம் பூர்த்தியான பின்னரே வழங்கப்படுமென சுற்றுநிரு பத்தில் தெரிவிக்கப்பட்டுள் ளது.

இந்த நிலைமை இவ் ஊழி யர்கள் சுட்டிக்காட்டியதை அடுத்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## சுருட்டுத் தொழிலாளர் நலன் ஆராயக்கூட்டம்

வடபிராந்திய சுருட்டுத் தொழிலாளர் சங்கத்தின் பொதுக் கூட்டமும், நிர்வாக சபை தெரிவும் எதிர்வரும் சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கொக்குவில் ஞான பண்டிதர் வித்தியாசாலை யில் நடைபெறவுள்ளன.

இக்கூட்டத்திற்கு திரு. பொன் மதிமுகராஜா (வட பிராந்தியமினியன்சங்கத்தலை வர்) தலைமை வகிப்பார்.

தமிழீழத்தில் வாழும் சுருட் டுத் தொழிலாளரின் நியாய பூர்வக்கோரிக்கைகளை வென் றெடுத்தல், அவர்களது நிலையு யர்த்தல், சமூக இடரினின்றும் மாற்றம் பெறுதல், தொழிலா ளரை ஒரணிக்குள் கொண்டு வருதல் ஆகியனபற்றி இக்கூட் டத்தில் ஆராயப்படுமெ னத் தெரிவிக்கப்படுகிறது.

சுருட்டுத் தொழிலாளரை இக் கூட்டத்துக்கு அவசியம் சமூகமளிக்குமாறும் கோரப் பட்டுள்ளது.

## பிரமாண்ட மே தின ஏற்பாடு

## எதிர்ப்பு அலையைத் தணிக்க அரசுமுயற்சி

மேதினத்தை பிரமாண்ட மான அளவில் கொண்டாட ஐக்கிய தேசியக்கட்சி முடி வெடுத்துள்ளதாக ஜனாதிபதி பிரேமதாஸா அறிவித்துள் ளார்.

எதிர்க்கட்சியினரின் அரசுக் கெதிரான பிரசாரங்கள் வலு வடைந்து வருவதினாலும், அன்னையர் முன்னணியின ருக்கு தெற்கில் ஆதரவு பெருகிவருவதினாலும் தன் நிலைமையை ஸ்திரப்படுத்திக் கொள்வதற்கு மேதினத்தைப் பயன்படுத்த அரசு திட்டமிட் டுள்ளதாக கூறப்படுகின்றது.

கடந்த வருடங்களைப் போல இந்தியாவிலிருந்து கலைஞர்களை வரவழைத்து, காலிமுகத்திடலில் கலை நிகழ்ச்சிகளை நடாத்தி மக் களைக் கவரவும் அரசு திட்ட மிட்டுள்ளதாக தெரிவிக்கப் படுகின்றது.

அன்னையையும், அப்பனையும் நினைவு கூரச் செய்தன. மிக்க நன்றி.

தங்கள் குடும்பத்துக்கு நாவலர் பெருமானின் ஆத்மீக ஆசி உண்டு. தங்கள் முன்னோரின் தவ விசேடத்தாலும், தங்கள் தவ விசேடத்தாலும், தங்கள் அருமை மனைவி யாரின் அன்னதான விசேடத்தாலும், தேவாரம் பெற்ற புண்ணியத் தலமான திருக்கேதீச்சரத்தில் வசிக்கும் வாய்ப்புத் தங்களுக்கு அமைந்திருக்கின்றது.

பொழுது, திருமுறைகளை எழுதுவதாம் பொன்னான பொழுதாய் அமைகின்றது. எல்லாம் அம்மை அப்பன் அருளே.

இங்கே அனுப்ப எண்ணும் பிரதிலைப் பூர்த்தியானதும் அனுப்பலாம். அதனைப் பூசை அறையில் வைத்துத்தினமும் பூசிக்கும் வாய்ப்பு ஏற்படும். தங்கள் பாராட்டுரைகளுக்கு நான் எம்மாத்திரம்! பாராட்டுக்களை நாவலர் பெருமான் திருவடிகளுக்கே சமர்ப்பணம் செய்கின்றேன்.

''வினைப்போகம் தீர்ந்தால்
தினைப்போதும் நில்லாது உயிர்''

இப்பொழுது நேரிடும் இன்ப துன்பங்களை, ஆசாபியம் ஏறாமல், மனசைப்பாதுகாத்து, மனதில் தெய்வ நினைவே சதா ஊற்றெடுக்க முயல்வோமாக!

வணக்கம்.

அன்புள்ள,
சி. க.

சைவப்பெரியார் கு. அருளம்பலத்திடமிருந்து வந்த கடி தம் தேக்பொந்தில் இருந்து வந்தது. பண்டிதர் ஐயா எழுதிய கடிதம் தேக்பொந்தை நோக்கி அனுப்பி வைக்கப்பெற்றது. இந்த இரண்டுமே பிரசித்தி வாய்ந்தவை. ''தேக்பொந்தில் இரு கடிதங்கள்'' என்று இவற்றைக் குறிப்பிடுவது சாலவும் பொருந்தும்.

— ஆசிரியமணி அ. வே. கு. பஞ்சாட்சரம்

(இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்களது நினைவு தினம் இன்றாகும்)

# ★ 9மாதகாலமாக சுகாதார அமைச்சு அனுப்பாததால்
# தாய்மாருக்கு போஷாக்கு மருந்து இல்லை
# பிறக்கும் குழந்தைகளுக்கு மூளை பாதிப்பு

போஷாக்கு குறைபாட்டினால் ஐந்து வயதுக்குட்பட்ட 51 வீதமான பாலகர்கள் வயதிற்கேற்ற நிறையின்றிக் காணப்படுவதாக சுகாதார புள்ளிவிபர மதிப்பீடு ஒன்று தெரிவிக்கின்றது.

தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவும் பிராந்திய சுகாதார பயிற்சி நிலையமும், கடந்த வாரம் மேற்கொண்ட ஆய்வின் மூலம் இது தெரிய வந்துள்ளது.

இவ் ஆய்வு உடுவில் சுகாதார பரிசோதகர் பிரிவில் முதலாக மேற்கொள்ளப்பட்டது.

80 வீதமான கர்ப்பவதிகள் 45 வீதத்திற்குக் குறைவான இரத்தத்தையும் 91 வீதமான பாலூட்டும் தாய்மார்கள் 45 வீதத்திற்குக் குறைவான இரத்தக்குறைவையும் கொண்டுள்ளனர் எனவும் தெரிய வந்துள்ளது.

கடந்த ஒன்பது மாதகாலமாக இரத்தக் குறைபாட்டுக்கான மருந்து வகைகளும், உயிர்ச்சத்துக் குளிசைகளும் போதியளவு வந்து சேராததாலேயே இந்நிலை தோன்றியுள்ளதாக சுகாதார அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

யுனிசெப் நிறுவனத்தால் அனுப்பப்படும் 'தாய்சேய்நல' மருந்து வகைகளும் அரசால் அனுப்பப்படவில்லை.

இதனால் எதிர்காலத்தில் கர்ப்பவதிகளுக்கு இரத்தச் சோகை ஏற்பட்டு பிறக்கும் குழந்தைகள் நிறைகுறைவாகப் பிறப்பதுடன், மூளை வளர்ச்சியும் பாதிப்படையும் ஆபத்துத் தோன்றியுள்ளதாக சுகாதார வட்டாரங்கள் அச்சம் தெரிவித்துள்ளன. (70

## இலங்கை வங்கி 2ஆம் கிளையில் சனிக்கிழமை நிவாரணம்

இலங்கை வங்கி பிரான்பற்று வீதிக்கிளையில் 16-ஆம் திகதி சனிக்கிழமை கீழ்வரும் கிராம சேவையாளர் பிரிவைச் சேர்ந்த குடும்பங்களுக்கு முன்னர் பெயர் குறிப்பிடப்பட்டு எடுக்கத்தவறியவர்களுக்கு 1000 ரூபா, 2000 ரூபா கொடுப்பனவுகள் வங்கிக் காசோலையாக வழங்கப்படவுள்ளது. அவற்றின் விபரம் வருமாறு:

அரியாலை கிழக்கு, அரியாலை மத்தி, வண் வடமேற்கு, வண் வட கிழக்கு, கந்தர்மடம், நல்லூர் வடக்கு, திருநெல்வேலி மேற்கு, திருநெல்வேலி கிழக்கு, கோண்டாவில் மேற்கு, கோண்டாவில் கிழக்கு, கொக்குவில் கிழக்கு, கொக்குவில் மேற்கு, கொக்குவில் மத்தி.

உற்பத்தி திறன்வாய்ந்த தொழில் முயற்சிக்கான 4000 ரூபா:

வண்ணார்பண்ணை வட மேற்கு, கந்தர்மடம், நல்லூர் வடக்கு, நல்லூர் தெற்கு திருநெல்வேலி கிழக்கு, கோண்டாவில் மேற்கு, கோண்டாவில் கிழக்கு, கொக்குவில் மத்தி.

நிவாரணம் பெற தகுதியுடையவர்கள் தங்கள் பகுதி கிராமசேவையாளர்களுடன் தொடர்பு கொள்ளுமாறும் வேண்டப்படுகின்றார்கள்.

## முல்லைத்தீவு அலுவலகங்களில் போதிய ஊழியர்கள் இல்லை

முல்லைத்தீவில் உள்ள அலுவலகங்களில் போதிய ஊழியர்கள் இன்றி வேலைகள் ஸ்தம்பிதமடைகின்றன.

கூடுதலான ஊழியர்கள் சுயவிருப்பத்தில் ஓய்வு பெற்றதையடுத்து தபால் அத்தியட்சகர் அலுவலகம், கச்சேரி, மற்றும் உதவி அரசாங்க அதிபர் அலுவலகங்களில் சில அத்தியாவசிய வேலைகளைக் கூட செய்ய முடியாதிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

இதனால் ஒப்பந்த அடிப்படையில் சில ஊழியர்களை வேலைக்கு அமர்த்துவதுபற்றியும் ஆராயப்படுகிறது. (38)

## ட்ரான்ஸ்போமர் ஒயில் திருட்டு இருவர் பிடிபட்டனர்

திருநெல்வேலியில் செவ்வாய் இரவு ட்ரான்ஸ்போமரில் ஒயில் திருட முயன்ற நால்வரில் இருவர் கையும் மெய்யுமாகப் பிடிபட்டனர்.

இதில் இருவர் அவலவரின் சத்தம் கேட்டு தப்பி ஓடி விட்டனர்.

பிடிபட்டவர்களுடன் சைக்கிள், பேரல், சாவிகள் என்பனவும் கைப்பற்றப்பட்டுள்ளன. (74)

## தொண்டர் நிறுவன வாகனங்கள் குடும்பப் பாவனைக்கு?

யாழ்ப்பாணத்தில் சேவையாற்றும் சில தொண்டர் நிறுவனங்களின் வாகனங்கள் அங்கு பணிபுரியும் ஊழியர்களின் தேவைகளுக்கும் பயன்படுத்தப்படுவதாக கொழும்புக்கு புகார்கள் வந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

சிலர் குடும்பத்துடன் இதில் பயணம் செய்வதாகவும் இப்புகாரில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (71)

## தலாய்லாமாவுக்கு கண்டனம் திபெத் பெண்கள் ஆர்ப்பாட்டம்

திபெத்திய ஆன்மீகத்தலைவர் தலாய்லாமா இந்தியாவில் இருந்து கொண்டு சீனாவுக்கு எதிராக அரசியல் பேச வேண்டாம் என இந்தியா கண்டனம் வெளியிட்டது.

இது இந்தியாவில் வாழும் திபெத்திய மக்களிடையே சீற்றத்தை ஏற்படுத்தியதாகவும், ஆத்திரமடைந்த திபெத்தியர் புதுடில்லி வீதிகளில் ஊர்வலம் நடாத்தியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஊர்வலத்தின் போது திபெத்திய பெண்களுக்கும் பொலிஸாருக்கும் இடையில் மோதல் ஏற்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

திபெத்தை சீனா ஆக்கிரமித்தகாலம் முதல் தலாய்லாமா இந்தியாவில் தஞ்சமடைந்துள்ளது தெரிந்ததே.

## கட்டாக்காலி நாய்கள் தொல்லை அதிகரிப்பு

கட்டாக்காலி நாய்களின் தொல்லை மீண்டும் தீவுப்பகுதி உட்பட குடாநாட்டில் அதிகரித்துள்ளதாகவும், தற்போதைய உஷ்ணம் காரணமாக அவை விசர் நோயினால் பீடிக்கப்படுகின்றன எனவும் தெரிவிக்கப்படுகிறது.

அண்மையில் சில தினங்களாக இவை பிடிக்கப்படுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டன. ஆனால் மீண்டும் இவை பெருகிவருவதாகவும், பலர் நாய்கடித்து சிகிச்சைக்கு வருவதாகவும் கூறப்படுகிறது (33, 19)

## திரிபோஷா உற்பத்தி நிறுத்தம்

அமெரிக்க 'கெயர்' ஸ்தாபனத்தால் மேற்கொள்ளப்பட்டு வந்த 'திரிபோஷா' உற்பத்தி கடந்த வருடத்துடன் நிறுத்தப்பட்டுள்ளதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

சுகாதார அமைச்சும் கெயர் ஸ்தாபனமும் செய்து கொண்ட ஒப்பந்தம் கடந்த வருடத்துடன் காலாவதியானதால் 'திரிபோஷா' உபத்திற் நிறுத்தப்பட்டுள்ளது.

'திரிபோஷா' உற்பத்தியை சிலோன் ருபாக்கோ கொம்பனி உற்பத்தி செய்து வந்தது குறிப்பிடத்தக்கது. (70)

## பிரான்ஸில் சென்.பற்றிக்ஸ் தினம் பழைய மாணவர்கள் ஏற்பாடு

பிரான்ஸில் உள்ள யாழ் சென். பற்றிக்ஸ் கல்லூரியின் பழைய மாணவர் சங்கம் இம் மாதம் 17ஆம் திகதி இப்புனிதரின் தினத்தைக் கொண்டாடவுள்ளனர்.

இங்குள்ள புனித ஜூசைப்பர் ஆலயத்தில் திருப்பலியும் அதனையடுத்து கிரிக்கெட், உதைபந்தாட்டம், விளையாட்டு போட்டிகளும் நடைபெற ஏற்பாடாகியுள்ளதாக பிரான்ஸ் பழைய மாணவர் சங்க செயலாளர் ஐ.போ. பாக்கியராஜா அறிவித்துள்ளார்.

## பரீட்சை மேற்பார்வைக்கு இன்னமும் கொடுப்பனவு இல்லை

1989 இல் நடைபெற்ற பயிலுநர் ஆசிரியர்களைத் தெரிவு செய்வதற்கான பரீட்சையில் பரீட்சை மேற்பார்வையாளர்களாகவும் நிரந்தர, சாதாரண நோக்குநர்களாகவும் கடமையாற்றிய உத்தியோகத்தர்களுக்கான கொடுப்பனவுகள் இதுவரை வழங்கப்படவில்லை என கவலை தெரிவிக்கின்றனர்.

இப் பரீட்சைக்கு மேற்பார்வையாளர்களாகக் கடமையாற்றியவர்கள் மண்டப ஒழுங்குகள் மற்றும் சிறு செலவுகளுக்குத்தமது சொந்தப் பணத்திலேயே கொடுத்துள்ளனர். என்பதும் குறிப்பிடத்தக்கது (12)

---

**விவசாய...**

களுக்கு வழங்கப்படவுள்ளதாக சம்பந்தப்பட்ட வட்டாரங்களில் இருந்து அறியப்படுகிறது.

இதேவேளை இக்கப்பலில் நிவாரணத்திற்காக மிகக் குறைந்தளவு உணவுப்பொருள்களே கொண்டுவரப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது. (66)

## பணநஷ்டம் ஏற்படும் எனவே தேர்தல் வேண்டாம்-தேவிலால்

பொதுத்தேர்தலை நடாத்தாது தேசிய அளவிலான கூட்டணி அரசை அமைக்குமாறு தேவிலால் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இவரது இப்புதிய அறிவிப்புக்கு இந்திரா காங்கிரஸ் கட்சியினர் ஆதரவு அளிக்கின்றனரா? என்ற சந்தேகம் புதுடில்லிவட்டாரங்களில் நிலவுவதாக ஏஜென்சி செய்திகள் தெரிவித்தன.

பொதுத்தேர்தலை நடாத்துவதால் 1500 கோடி ரூபா நஷ்டம் ஏற்படும் என காரணம் கூறுகிறார் தேவிலால்.

---

**ஆயுர்வேத...**

வடிக்கை எடுக்கும் போது தமிழ்ப்பகுதிகளில் இதனை செயற்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் வட்டாரங்கள் தெரிவித்தன. (19)

**இந்தியாவுடன்...**

முகத்தை இந்தியாவுக்கு எதிராக எந்த வெளிச்சக்தியும் பயன்படுத்தக் கூடாது என்றும் 'வொய்ஸ் ஒவ் அமெரிக்கா' வுக்கு தொடர்பு வசதிகளை அளிக்கக் கூடாது என்றும்

**கூட்டுறவுச்—**

றுக் கொள்ளக் கூடியதாக விருக்கும் எனவும் தெரிவிக்கப் படுகிறது.

இலவச உலர் உணவு நிவாரண வேலைகளுக்காக 1800 மெற்றிக் தொன் உணவுப் பொருள் அ...

## சுயவிருப்பத்தில் ஓய்வுபெற்ற
## தெற்கில உள்ள தமிழ் அதிகாரிகள் மீண்டும் வேலைக்கு விண்ணப்பம்

தென்பகுதியில் அண்மையில் சுயவிருப்பத்தில் ஓய்வு பெற்ற தமிழ்த்தபால் உத்தியோகத்தர்கள் வடக்கே வர முடியாதநிலையில் மீண்டும் ஒப்பந்த... பல தபால் அலுவலகங்களில் இவர்களின் ஓய்வினால் அலுவல்கள் செய்யமுடியாத நிலை ஏற்பட்டுள்ளதால், மீண்டும்

---

### காலமானார்
**திரு. தூசை மோசேஸ்**
(இளைப்பாறிய ஆசிரியர்)

(இளைப்பாறிய ஆசிரியர்)

தோலகட்டி, பலாலி - தெற்கு - வசாவிளானைச் சேர்ந்த, இளைப்பாறிய ஆசிரியர் திரு சூசை மோசேஸ் 10 3.1991, ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் காலமானார். இவர் அன்னமரியம்மா (மணி)வின் அன்புக் கணவரும், ஸ்ரனிஸ்லாஸ் (பிரான்ஸ்), ஜோன்சன் ரையின் (பிரான்ஸ்), காலம் சென்ற பாலச்சந்திரன் (பாலு), மனோகரன் (கனடா), சந்திரிக்கா (சந்திரா பிரான்ஸ்), இமெல்டா (இந்திரா), சுபத்திரா, மஞ்சுளா றிச்சாட் (பிரான்ஸ்), டேனால்ட் (பிரான்ஸ்), டெலாஸி (பிரான்ஸ்) இவர்களின் அன்புத் தந்தையும், மேரி அஞ்சலா (பிரான்ஸ்), லங்கேஸ்வரன் (பிரான்ஸ்), பாலேந்திரன் (பிரான்ஸ்), கருணைநாதன் இவர்களின் மாமனாரும், றொனால்ட், றொஸ்சன், றேசா, சுபிலன் றேகன், சிந்து ஆகியோரின் அன்புப் பேரனும், காலம் சென்ற பிலிப் திரவியம், காலம் சென்ற சவிரிமுத்து, மேரி யோசப்பின் (நல்லம்மா) இவர்களின் அன்புச் சகோதரனும் ஆவார். இவரின் நல்லடக்கம் 24 3.91இல் பொறளை கனத்தை சேமக்காலையில் நடைபெறும். இத்தகவலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இங்ஙனம்
அன்பு மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்.

25/2 மத்தியூஸ் வீதி,
யாழ்நகர்.

தகவல்: பிலிப் சுவிஸ்ரஸ் ரவின்
(யோண்சன்)

03066

றும் 'வொய்ஸ் ஒவ் அமெரிக்கா'வுக்கு தொடர்பு வசதிகளை அளிக்கக் கூடாது என்றும் குறிப்பிடப்பட்டிருந்தது.

ஆனால் இந்தியா மீது இவை போன்ற எந்தக்கட்டுப்பாடும் விதிக்கப்படவில்லை இது பற்றியே பிரேமதாஸ தமது தேர்தல் பிரசாரத்தில் குறிப்பிட்டிருந்தார்.

கடந்த வருடம் இலங்கை, இந்தியாவிடம் நகல் உடன்படிக்கையை கையளித்ததாகவும் அதற்குப்பதிலாக இந்தியாவும் நகலை சமர்ப்பித்ததாகவும் இலங்கை ஆட்சேபித்த அம்சங்கள் இந்திய நகலில் இன்னமும் இருக்கவே செய்கின்றன என்றும் திருடுபே தெரிவித்தார்.

---

**படுமாதா—**

இடம்பெறும் சம்பவங்களை யடுத்து மடுவுக்கு இப்பகுதியில் இருந்து மேலும் அகதிகள் வருகின்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த அகதிகளும் தம்மை வெளியேற்ற வேண்டாம் என்றும் வேறு இடம் தமக்குப் பாதுகாப்பு இல்லை என்றும் அதிகாரிகளிடம் கேட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (70)

இலவச உலர் உணவு நிவாரண வேலைகளுக்காக 1800 மெற்றிக் தொன் உணவுப் பொருள் அரசினால் அனுப்பப்பட்டுவந்தது.

ஆனால் இம்முறை வந்த லங்காசிறி கப்பலில் 800மெற்றிக்தொன் உலர் உணவுப் பொருளகளே அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

இதனால் நிவாரண வேலைகள் குறிக்கப்பட்ட திகதிக்குள் வழங்குவது சிரமமாக இருக்கும் என மேலதிக அரசாங்க அதிபர் எஸ். சண்முகநாதன் தெரிவித்தார்.

கையிருப்பில் உள்ள உலர் உணவுப்பொருள்களோடு கப்பலில் வந்த உலர் உணவுப் பொருள்களும் சேர்த்து வழங்கப்படவுள்ளதாகவும் அவர் மேலும்தெரிவித்தார். 66,ப11

---

**வவுனியாவில்—**

தேக்குளம் பகுதியில் குண்டுகளை வீசின. இதில் சந்திரகுமார் (14), சௌந்தரநாயகம் (50) ஆகியோர் காயமடைந்தனர். தொடர்ந்து கிடாச்சூரி பகுதியில் நடந்த குண்டு வீச்சில் கலாநிதி (20), செல்வநாயகி (30) ஆகியோர் காயமடைந்தனர். (70)

யில் சுயவிருப்பத்தில் ஓய்வு பெற்ற தமிழ்த்தபால் உத்தியோகத்தர்கள் வடக்கே வர முடியாததால் மீண்டும் ஒப்பந்த அடிப்படையில் வேலைசெய்ய விண்ணப்பித்துள்ளனர்.

இதேபோல வடபகுதியில் ... தபால் அலுவலகங்களில் இவர்களின் ஓய்வினால் அலுவல்கள் செய்யமுடியாத நிலை ஏற்பட்டுள்ளதால், மீண்டும் ஒப்பந்த அடிப்படையில் பணி புரிய விண்ணப்பித்துள்ளனர் (33

## யாழ் பெரியாஸ்பத்திரிக்கு டீசல் அனுப்பப்படவில்லை

பருத்தித்துறைக்கு வந்த லங்காசிறி கப்பலில் யாழ் போதனாவைத்தியசாலைக்கு இம்முறை சுகாதாரத் திணைக்களம் டீசல் அனுப்பிவைக்காததையடுத்து ஆஸ்பத்திரி நிர்வாகம் அதிர்ச்சி தெரிவித்துள்ளது.

இவ்வைத்திய சாலைக்கு மாதாந்தம் 32 பெரல்கள் டீசல் தேவைப்படுகிறது. தற்போது டீசல் தீர்ந்துவிட்ட நிலையில் அரசசார்பற்ற நிறுவனங்களிடமிருந்து டீசலை கடனாகப் பெற்று ஆஸ்பத்திரிக்கு மின்சாரம் வழங்கப்படுகிறது. (ப- 11)

## துறைமுகத்தில் சுங்க மோசடி தமிழ் வர்த்தகர்களுக்கு றிமாண்ட்

புறக்கோட்டையில் உள்ள இரு தமிழ் வர்த்தகர்களை கொழும்புத் துறைமுக மஜிஸ்திரேட் திருமதி வணிகசேகரா விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டுள்ளார்.

வெளிநாட்டில் இருந்து 1.2 மில்லியன் ரூபா பெறுமதியான புடவை இறக்குமதி செய்து போலிச்சுங்க ஆவணங்களை இவர்கள் சுங்கப் பகுதிக்கு காண்பித்து இவற்றை துறைமுகத்தில் இருந்து அப்புறப்படுத்தியதாக நீதிமன்றத்தில் குற்றம் சாட்டப்பட்டுள்ளனர். (70)

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷேர்ஸ் (பிறைவேட்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ் கல்வியங்காடு 'டச்சு வீதி, லக்ஷ்மிபில்டிங்'கில் உள்ள அச்சகத்தில் 13 - 03 - 1991 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.